# பாஸ்கா 3ஆம் வாரம் - ஞாயிறு

## மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பாஸ்கா காலத்தின் 3ஆம் வாரம் இது.

'உணவருந்த வாருங்கள்' என்ற அழைப்பை தன்னுடைய சீடர்களுக்கு கொடுக்கின்றார். களைத்தவரை ஊக்குவிக்க, தானே முன்நின்று உணவருந்த அழைக்கின்றார். பிடித்த சில மீன்களையும் கொண்டு வரச் சொல்லி உணவு கொடுக்கின்றார்.

'திருவிருந்துக்கு வாருங்கள்' என்ற அழைப்பை ஏற்று, பலியிலே பங்கேற்க வந்துள்ளோம். நம்மிடையே உள்ளவைகளையும் எடுத்துச் சென்று, பகிர்ந்து உண்ண அழைக்கப்பட்டுள்ளோம்.

அம்மையப்பனாக உள்ள இறைவனின் கருணையை புசித்துப் பார்த்து, நாமும் பசி போக்கும் தாய்மை உள்ளம் கொண்டவர்களாவோம். வரம் வேண்டுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. திருச்சபை, தன்னுடைய அமைப்பு ரீதியிலான போக்கை மாற்றி, இயேசுவின் தாய்மைப் பண்பினை தனதாக்கி, உணவு கொடுத்து, உயிர் கொடுத்து வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நாட்டு மக்களின் வறுமையை பயன்படுத்தி, முதலாளிகள் தங்கள் நிலையை தக்க வைத்துக் கொள்ளாமல், பகிர்ந்து கொடுத்து வாழும் மனதினை தந்திட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. விலைவாசி ஏற்றத்தின் பாதிப்பினை உணர்ந்து ஆள்வோர், தங்களது பொருளாதார கொள்கைகளை மாற்றியமைத்துக் கொள்ள அறிவை, ஞானத்தை தந்திட அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. முயற்சிக்காமல், உழைக்காமல் உண்ணுகின்ற நிலையை மாற்றி உழைத்து, கடினப்பட்டு உழைத்து உண்ண, நல்மனம் அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. தமிழர்கள் ஒன்றுபட்டு, தன்மானத்தோடும், தன்சக தமிழனின் நல்வாழ்வில் அக்கறையும் கொண்டு, தனிமனித துதி, சின்ன, வெள்ளை திரைகளுக்கு அடிமைப்பட்டு போகாமல் வாழ அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com